பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 18 செவ்வாய்க்கிழமை (02.01.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 38

## ஊரடங்குச் சட்டம் ஒரு மணிநேரம் தளர்வு

யாழ்ப்பாணம், ஜன.2

குடாநாட்டில் ஊரடங்குச்சட்டம் இன்று முதல் மேலும் ஒரு மணிநேரம் தளர்த்தப்படுவதாக யாழ். பாதுகாப்புத்தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

நேற்று இரவு 8மணிக்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை 4மணிக்கு நீக்கப்படும் என்றும் -

இன்று இரவு 9மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்கு நாளை அதிகாலை 4மணிக்கு நீக்கப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)

## இந்தியப் பயணம் மிகுந்த நம்பிக்கை தருவதாக நாடு திரும்பிய தமிழ்க் கூட்டமைப்பினர் திருப்தி

கொழும்பு, ஜன.2

தங்களது இந்தியப் பயணம் மிகுந்த நம்பிக்கையையும், திருப்தி யையும் அளித்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அனுபவிக்கும் அவல நிலை குறித்து இந்தியத் தலை வர்கள் கவனம் செலுத்துகின்றனர் என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், தமிழ் மக்களின் அவலங்கள் தொடர்பான கவலையையும் இந்தியத் தலைவர்கள் தம்மிடம் வெளியிட்டனர் என்றும் கூறியிருக்கின்றனர்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பிய தமிழ்க் கூட்டமைப்பினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

இந்தியாவுக்குக் கடந்த மாதம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பினர்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# இரு தரப்பையும் பொதுவாகக் கணிப்பிடும் சர்வதேசப் போக்கு இனிமேல் பயன்தராது!

## புத்தாண்டுச் செய்தியில் புலிகள் விளக்கம்

கிளிநொச்சி, ஜனவரி 2

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு திட்டமிட்ட வகையில் தமிழ் மக்கள் மீது போரைத் திணித்து தமிழர் தாயகப் பிரதேசங்களில் இனச்சுத்திகரிப்பையும் மேற்கொண்டுவருகிறது. இந்நிலையில் சர்வதேச சமூகம் இரண்டு தரப்புகளையும் பொதுவாகக் கணிப்பிட்டு கருத்துக் கூறுவது இனிமேல் விரும்பிய பலனைத் தரப்போவதில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

மலர்ந்துள்ள புத்தாண்டில் நீதியான அரசியல் தீர்வின் மூலம் நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளில் உலக சமூகம் தமிழ் மக்களோடு சேர்ந்து நிற்கும் என எதிர்பார்க்கிறோம்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று வெளியிட்ட புதுவருட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் தாக்குதல்

கொழும்பு,ஜன.2

கொக்குவில், அரசடிப் பகுதியில் பணியில் இருந்த படையினரை நோக்கி நேற்றுக்காலை 9 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. பின் சிறு ஆயுதங்கள் கொண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இத்தாக்குதலை அடுத்து படையினர் மேற்கொண்ட தேடுதலில் கிரனேட் ஒன்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1)

## வவுனியாவில் கிளைமோர் 2 கான்ஸ்டபிள்கள் பலி!

வவுனியா, ஜன.2

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் நேற்று மாலை 4மணியளவில் பொலிஸ் ஜீப் மீது கிளைமோர்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர் என்றும் மற்றொரு கான்ஸ்டபிள் படுகாயமடைந் தார் என்றும் தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் மையம் தெரிவித்தது.

காயமடைந்த கான்ஸ்டபிள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.(1)

## வங்கிகளில் வாடிக்கையாளர் பணிகளை மேலும் ஒரு மணிநேரம் நீடிப்பதற்கு முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.2

குடாநாட்டில் உள்ள சகல வங்கிகளிலும் வாடிக்கையாளருக்கானகொடுக்கல் வாங்கல் பணிகளை மேலும் ஒரு மணி நேரம் நீடிப்பது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் கடந்தசனிக்கிழமை நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரச அதிகாரிகள் மற்றும் வங்கிகள், ரெலிகொம், மின் சாரசபை, வைத்தியசாலைகள், பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் பல விடயங்கள் கவனத்துக்கு எடுக்கப்பட்டு ஆராயப்பட்டதோடு, முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அவை வருமாறு:-

★குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் தொடர படையினர் ஒத்துழைப்பு வழங்குவர்.

(05 ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாயில் கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன.2

வடமராட்சி, அல்வாய் - நாவலடி என்ற இடத்தில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். நான்கு சிப்பாய்களும், ஒரு சிவிலியனும் காயமுற்றனர்.

நேற்றுக்காலை 7.50 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இச்சம்பவத்தில் தங்கவேல் பார்த்தீபன் (வயது-28) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். இவர் அருகிலுள்ள ஆலயத்தில் நடைபெற்ற திருவெம்பாவைப்

(06ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பணிகளைக் குறைத்துக்கொள்கிறது

கொழும்பு, ஜன.2

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கண்காணிப்பு நடவடிக்கைகளைக் குறுகிய காலத்துக்குக் குறைத்துக் கொள்ளவுள்ளது.

இலங்கைப்படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் தொடர்வதால் தனது செயற்பாடுகளையும், குழுவையும் மறு ஆய்வு செய்ய கண்காணிப்புக் குழு முடிவெடுத்துள்ள காரணத்தால் சிறிது காலத்துக்குத் தனது நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ள குழு தீர்மானித்துள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தேசிய அடையாள அட்டை வழங்கும் பணி நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஜன.2

தமிழீழ தேசிய அடையாள அட்டைவழங்கும்பணிநேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ ஆள்பதிவுத் திணைக் கள ஆணையாளர் ச.ஜெயேந்திரன் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு முதலாவது தேசிய அடையாள அட்டையை உத்தியோகபூர்வமாகக் கையளித்து பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

சகலருக்கும் தேசிய அடையாள அட்டைகள் திணைக்களத்தால் தொடர்ந்து வழங்கப்படும் என ஆணையாளர் தெரிவித்தார். (அ-1)




## நிபுணர் குழுவின் தலைவர் தர்மசிறி பீரிஸ் இராஜினாமா

கொழும்பு,ஜன.2

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தலைவர் தர்மசிறி பீரிஸ் தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே தாம் பதவி விலகுவதாக அவர் தெரிவித்திருந்த போதிலும், நிபுணர்கள் குழுவின் செயற்பாடுகள் குறித்து தெளிவில்லாத நிலைமை உருவாகி இருப்பதே தலைவரின் இராஜினாமாவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

பதினேழுபேர் கொண்ட நிபுணர் குழு நான்காகப் பிரிந்து தனது யோசனைகளை அண்மையில் சமர்ப்பித்திருந்தது.

அவற்றில் 11 பேர் கொண்ட குழு 'ஏ'

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சதானந்தன் யோகராணி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதானந்தன் யோகராணி 30.12.2006 சனிக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கோபாலு - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் சண்முகநாதன் - பூமணி தம்பதியரின் மருமகளும் சதானந்தனின் மனைவியும் மயூரன், பிரதீபன் (பிரபா), டயானா ஆகியோரின் தாயும் அமுதகுமாரின் மாமியும் அம்சிகாவின் பேர்த்தியும் சோதிராசா (ஹொலண்ட்), பவானி ஆகியோரின் சகோதரியுமாவார்.

இறுதிக்கிரியைகள் பொரளையிலுள்ள ஜெயரத்ன மரணச்சடங்கு மண்டபத்தில் இன்று 02.01.2007 பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.69, G.P.S. றோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

தகவல்: ச.மயூரன் (மகன்), பா.பவானி (சகோதரி). (65447)

## ஐயாத்துரை பாலசுப்பிரமணியம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாலசுப்பிரமணியம் நேற்று 01.01.2007 சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு, உடுவில்.*

தகவல்: மனைவி, பிள்ளைகள். (65442)

## செல்வி நடராஜா கலைவாணி

(முன்னாள் ஆசிரியை யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், தற்போது கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரி ஆசிரியை)



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த செல்வி நடராஜா கலைவாணி நேற்று 01.01.2007 காலமானார். அன்னார் நடராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - நவமணி தம்பதியரின் ஏகபுத்திரியுமாவார். அவரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சீயாக்காடு இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 077 9116217.*

தகவல்: குடும்பத்தினர். (65414)

## திருமதி யான்சன் மேரி ஆன் யஸ்மலர்

(முன்பள்ளி ஆசிரியை - குருநகர் ச.ச.நி.)



திருமதி யான்சன் மேரி ஆன் யஸ்மலர் 31.12.2006 அன்று காலமானார். அன்னார் சந்தியா யான்சனின் மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி டேவிற் வைலற்றின் மகளும் காலஞ்சென்ற சந்தியா அன்னமலரின் மருமகளுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 02.01.2007 பிற்பகல் 3.30 மணிக்கு பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின் பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும்.

*குருநகர்.* (65444)

தகவல்: குடும்பத்தினர், சக முன்பள்ளி ஆசிரியர், குருநகர் ச.ச.நி.

## செல்லத்துரை துரைசிங்கம்

(N.K.S.T. சுருட்டுத் தொழிலக உரிமையாளர்)

தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை துரைசிங்கம் 31.12.2006 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*ராஜ வீதி, கல்வியங்காடு.*

தகவல்: ஜெயலட்சுமி (மனைவி). (65441)

## திருமதி மேரிப்பிள்ளை ஞானப்பிரகாசம்



கூழாவடியைச் சேர்ந்த திருமதி மேரிப்பிள்ளை ஞானப்பிரகாசம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் மனைவியும் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை, தோமஸ் பூபாலு, இராசா, நவரத்தினம், இராசரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் தாயும் மனோன்மணி, மேரிமலர், பத்மாவதி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சறோ, ஆனந்தராணி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்கத்திற்காக இன்று 02.01.2007 பி.ப. 2 மணிக்கு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சோமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*கூழாவடி, ஆனைக்கோட்டை.*

தகவல்: தோமஸ் பூபாலு (மகன்). (65428)

## நடராசா ஐயர் குணபூசனியம்மா



வேலணையைப் பிறப்பிடமாகவும் தென்கோவை கற்பகப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நடராசா ஐயரின் மனைவி குணபூசனியம்மா 31.12.2006இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நடராசா ஐயரின் துணைவியும் சிவகுமாரன் (அவுஸ்திரேலியா), சிவபாலன் (இ.மி.ச.-பருத்தித்துறை), சிவகணேசன் (பிரான்ஸ்), சிவகுலேந்திரன் (ஜேர்மனி), விமலாதேவி (ராசாத்தி) ஆகியோரின் தாயும் பிரபாகரனின் (கனடா) சிறியதாயுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 01.01.2007 அவரது மகனின் கெருடாவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காட்டுப்புலம் இந்துமயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.* (65412)

தகவல்: ந.சிவபாலன் (மகன்-இ.மி.ச.).

## திருமதி மகேஸ்வரியம்மா சாரங்கபாணி ஐயர்

மல்வம், உடுவிலைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரியம்மா சாரங்கபாணி ஐயர் நேற்று 01.01.2007 காலமானார். அன்னார் ஜெயச்சந்திர பைரவமூர்த்தி, விவேகானந்தன், திருமதி பகவதி இராஜமோகன் ஆகியோரின் தாயும் திருமதி விசாலாட்சி மூர்த்தி, இராஜமோகன் ஆகியோரின் மாமியும் பரணீதரன், வைஷ்ணவி, தனுஜா, விதுஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கோயில் அருகில், மல்வம், உடுவில்.* (65504)

தகவல்: ச. இராஜமோகன் (மருமகன்)

## வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை

டச்சு றோட் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பெரிய மாவடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை நேற்றுக் காலமானார். அன்னார் வைத்திலிங்கம் - மீனம்மா தம்பதியரின் மகனும் சாந்தகுமாரியின் கணவரும் பிரசன்னா, பிரணியன் ஆகியோரின் தந்தையுமாவார். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமாவடி, சாவகச்சேரி.*

தகவல்: வே. சாந்தகுமாரி (மனைவி)

# 12ஆம் ஆண்டு நினைவில்...



அன்னை மடியில் 26.05.1925 — அம்மன் திருவடியில் 01.01.1995

அமரர்

## சின்னையா இரத்தினம்

(பிரபல வெற்றிலை வியாபாரி சாவகச்சேரி.)

திதி 21 - 12 - 2006

பன்னிரெண்டாண்டுகள் பறந்தோடியதோ!
பசுமையாய் இன்றும் உங்கள் நினைவு.
ஒன்றாய் இருக்க ஒரு ஞாயிறு தந்தீர் - அன்று
நன்றாய் இருந்தோம் நட்டுடனே - இன்று
நன்றாய்தான் உள்ளோம் ஒன்றாய்தான் இல்லை
வன்நெஞ்சோ எங்கள் அம்மனுக்கும்.
தாங்க முடியவில்லை அனைவரும் தவிக்கிறோம்
பத்தும் ஒன்றாகி அம்மன் திருப்பொங்கலிலே
கத்திக் கதைத்து கட்டியணைக்க வேண்டும்
குலதெய்வம் முத்துமாரியை இறைஞ்சிடுக ஐயா!

பெருங்குளம், பிள்ளையார் வீதி. முத்துமாரி அம்மன் வளவு கல்வயல் - சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன் மனைவி, மக்கள், மருமக்கள் பேரர், பூட்டர்

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தம்பிராசா

(கருவாட்டுக்கடை உரிமையாளர், திருநெல்வேலி)



புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் நிர்மலானந்தராணியின் கணவரும் தேவசேனா (சுதா- பிரான்ஸ்), நதீஷன் (பிரான்ஸ்), சுபாஜினி, தமிழினி (ராசாத்தி - கனடா), ஆகியோரின் தந்தையும் ஞானசம்பந்தர் (ஞானம் - பிரான்ஸ்), பத்மினி (பவானி), வித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புகையிரத நிலை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தகவல்: குடும்பத்தினர்.

## குமாரசாமி மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், B.Sc. London/Cey./Dip in Edu) யாழ். திருப்பாக் கல்லூரி, யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யா/உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்)



உடுப்பிட்டி சந்தை வீதியை பிறப்பிடமாகவும் மாலிசந்தி, அல்வாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட P.K.மகாலிங்கம் 31.12.2006 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா குமாரசாமி - மங்கையர்க்கரசியின் கனிஷ்ட புத்திரனும் தம்பிப்பிள்ளை இராசையா - அன்னம்மாவின் மருமகனும் மகேஸ்வரியின் கணவரும் நிர்மலன் (பொறியியலாளர், ஓசன் லங்கா, கொழும்பு), சுதர்சன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), புனிதராசா (M.S.F.மந்திகை), அனோஜா, காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் தந்தையும் கௌசலாவின் மாமனும் ஹரிஸ்வர், அக்ஷிதா ஆகியோரின் பேரனுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 ந.ப.12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஈஸ்வரி வாசா", மாலிசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்*

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## நாகர் பத்மநாதன் (சின்னக்கண்டு)



நவாலியைச் சேர்ந்த ஆசாரி நாகர் பத்மநாதன் (சின்னக்கண்டு) 28.12.2006 காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - பூரணம் தம்பதியரின் மகனும் தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகையின் கணவரும் கருணாகரன், இந்திராகாந்தி, பாஸ்கரன், சுபத்திராகாந்தி, கிருசாந்தி, நந்தாகரன் ஆகியோரின் தந்தையும் சாரதாதேவி, அருள்ராசா, சுகந்தினி, நகுலேஸ்வரன், கெங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனும் பொன்னுத்துரை காலஞ்சென்ற இலட்சுமியம்மா, குமாரதேவி, கணேசன், பூபாலசிங்கம், இராசமணி ஆகியோரின் சகோதரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் நாளை 03.01.2007 ந.ப.12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நவாலி வடக்கு, மானிப்பாய்.*

தகவல்: குடும்பத்தினர்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



முத்தவிநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த சுதேஸ் - பிரியந்தி தம்பதியரின் செல்வப்புதல்வன்

## கிஷாலன்

முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று (02.01.2007) செவ்வாய்க்கிழமை கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர், உற்றார், உறவினர், அனைவரும் நல்லூர் முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(65445) பெற்றோர்.



# ஈழத்துச் சிதம்பர பஞ்சரத பவனி காண வாரீர்



ஈழத்து சிதம்பர நடராஜன் தேரேறி வருகிறான்
இந்நாட்டு மக்களுக்கு தீர்வுதர தேரேறி வருகிறான்
ஆலமுண்ட கண்டன் ஐயப்பன் தேரேறி வருகிறான்
அழுகின்ற மக்களின் துயர்தீர்க்க தேரேறி வருகிறான்
நாளை எம் தேசத்தில் விடிவுதர தேரேறி வருகிறான்
நலமான வாழ்வுக்கு வழிகாட்ட தேரேறி வருகிறான்
ஏழை பங்காளன் எங்கள் சிவன் தேரேறி வருகிறான்
எம் பேத வாழ்வகற்றி வழிகாட்ட தேரேறி வருகிறான் - *மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்*

ஈழத்துச் சிதம்பர பஞ்சரத பவனி
தேர் விழா சிறக்க வாழ்த்துபவர்:
யாழ். காலணியகம், பாட்டா ஏஜென்சி
இல. 11, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 3152.


# மானிப்பாயில் கணனிக் கல்வி

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனி வகுப்புக்கள் ஆரம்பம் !!!!

Diploma in Microsoft Office (FICT & Word & Excel & Access & PowerPoint & Internet e-Mail)

Diploma in Desktop publishing (Pagemaker & Photoshop & CorelDraw)

Diploma in Video & AudioMixing (Pinnacle & Cool3D & Xara3D & VCD Cutter & Photoshop & Sound Forge)

Diploma in Computerized Accounting Packages (ACCPAC & Quick Book & MYOB & Tally)

Diploma in Computer Programming (VB - 6 & DotNet & C++ & Java) & Etc..........

உங்கள் பதிவுகளை 03.01.2007ற்கு முன் மேற்கொள்ளவும். அனைத்து வகுப்புக்களும் 05.01.2007 காலை 9.00 மணிக்கு ஆரம்பம். எமது நிறுவனத்தால் வழங்கப்பட்ட Cash Card இனை வைத்திருக்கும் மாணவர்கள் உடனடியாக நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும்

UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் பொன்னையர் குருசாமி



தோற்றம்: 07-06-1927

மறைவு: 03-12-2006

*எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.01.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணிக்கு நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.*

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு. (65448)

என்றும் நீங்கா நினைவுகளுடன்: குடும்பத்தினர்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வேலுப்பிள்ளை நடராசா

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

மண்ணில் 10-11-1916

விண்ணில் 23-12-1996

நீங்கள் எம்மைப் பிரிந்து கரைந்து ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் நீங்குமோ உங்கள்
நினைவுகள் எங்கள் இதயத்தை விட்டு
என்றென்றும் ஆறாதே எங்கள் சோகம்
அன்பான ஐயாவே!

*துன்னாலை கிழக்கு, கரவெட்டி.*

உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர். (65445)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



## அமரர் சிவலை வல்லிபுரம்

மண்ணுலகு: 1932 - 03 - 25

விண்ணுலகு: 2006 - 12 - 03

கடந்த 03.12.2006 இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவர் சிவலை வல்லிபுரம் அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனைகள் 02.01.2007 செவ்வாய், 03.01.2007 புதன் இரு தினங்களும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கரும்பியோடை, சமரபாகு, வல்வெட்டித்துறை.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (65422)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## நல்லதம்பி மரியம்மா (மாரிமுத்து)

தோற்றம்: 1932.04.16

மறைவு: 2006.12.03

கடந்த 03.12.2006 விண்ணகம் சேர்ந்த அம்மாவின் மறைவுச் செய்தி கேட்டு இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும், தொலைபேசி, தந்தி மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி நாள் இதழிலும் மடலாகவும் செலுத்தியோருக்கும், யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலை போதனாசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தை அவர்களுக்கும் எமது இதயமுவர்ந்த நன்றிகளை நல்கின்றோம். 02.01.2007 மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

*வட்டுக்கோட்டை வீதி, நவாலி.* (65418)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## செய்திக் கொத்து

### கைதடி முதியோர் இல்லத்தில் வருடாந்த ஒன்றுகூடல்

கைதடி,ஜன.2

கைதடி அரச முதியோர் இல்லத்தின் முன்னாள் அத்தியட்சகர் எஸ்.யோகானந்தராஜாவிற்கான பிரிவுபசார விழாவும் இல்லத்தினரின் வருடாந்த ஒன்றுகூடலும் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை முதியோர் இல்லக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203-75)

### வடமராட்சியில் பனடோலுக்குத் தட்டுப்பாடு

உடுப்பிட்டி,ஜன.2

வடமராட்சியில் பனடோலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது சிக்குன்குனியா காய்ச்சலுக்கு வைத்தியர்கள் பனடோலுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் பனடோலுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரும் சிரமமடைகின்றனர். (203-155)

### சிக்குன் குனியா கருத்தரங்கும் சிரமதானமும்

யாழ்ப்பாணம்,ஜன.2

வதிரி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் உள்ள நலன்புரி நிலையத்தில் சேவாலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் சிக்குன் குனியா நோய் சம்பந்தமாக கருத்தரங்கும் சிரமாதானப் பணியும் இடம்பெற்றன.

சிக்குக்குனியா நோய் அச்சுறுத்தல் குடாநாட்டின் சகல பகுதியிலும் காணப்படும் நிலையில் மருத்துவபீட விரிவுரையாளர்களும் மாணவர்களும் இணைந்து மேற்படி கருத்தரங்கில் ஆலோசனை வழங்கியதுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து சுகாதார உத்தியோகத்தர்களும் நலன்புரி நிலைய மக்களும் இணைந்து சிரமாதானப் பணியில் ஈடுபட்டனர். (88)

### வருமானம் இன்மையால் நிவாரண முத்திரைகளை அடகுவைக்கும் மக்கள்

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வருமானமில்லாத வடமராட்சிப் பிரதேசத்தில் சில பகுதி மக்கள் நிவாரண முத்திரைகளை அடகுபிடித்து தமக்குத் தேவையான பிற பொருள்களைக் கொள்வனவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரிசி, மா, சீனி போன்ற பொருள்கள் ஓரளவு கிடைக்கின்றபோதும் ஏனைய பொருள்களை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை.

இதன் காரணமாகத் தமது நிவாரண முத்திரைகளை ஆயிரம் ரூபா முதல் மூவாயிரம் ரூபாவரை அடகுவைத்து தங்கள் தேவைகளை மக்கள் பூர்த்தி செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-155)

### படையினரின் கண்காணிப்பில் பெற்றோல் விநியோகம்

உடுப்பிட்டி,ஜன.2

கரவெட்டி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் படையினரின் நேரடி மேற்பார்வையில் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் முன்னுரிமை அடிப்படையில் வாகன உரிமையாளர்களுக்கு பெற்றோல் விநியோகம் செய்யப்படுவதை அவதானித்த படையினர் தற்போது பெற்றோல் விநியோகத்தை கண்காணிப்புச் செய்து வருகின்றனர். (203-155)

### சுன்னாகம் மேற்கில் கிணறுகளுக்கு குளோறின்

யாழ்ப்பாணம்,ஜன.2

சுன்னாகம் மேற்கில் உள்ள தனியார் கிணறுகளுக்கு குளோரின் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுன்னாகம் றோட்டரக் கழகத்தினரும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

மழை பெய்தமையைத் தொடர்ந்து கிணறுகள் இறைக்கப்படாமையால் குளோரின் இடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203-86)

## கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவானோருக்கு இம்மாத நடுப்பகுதியில் நியமனம் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,ஜன.2

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கு நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் அவர்களுக்கான நியமனங்கள் இம்மாத நடுப்பகுதியில் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் முற்பகுதியில் நடத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான (எஸ்.எல்.ஈ.எஸ்.) போட்டிப் பரீட்சை யின் முடிவுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் -

நேர்முகப்பரீட்சையின் முடிவுகள் இலங்கை பொதுச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் வழிப்படுத்தலுக்கு ஏற்ப தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனங்கள், பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

இது தொடர்பான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் ஜனவரி 15ஆம் திகதியளவில் நியமனங்கள் வழங்கப்படலாம் - என்று தெரிவித்தார். (203-11)

## சாதாரணதர விடைத்தாள் மதிப்பிடும்பணியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.2

கடந்த டிசெம்பர் 12ஆம் திகதி முதல் நடைபெற்ற ஜி.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணியை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.வலயப் பாடசாலைகளிலேயே இந்த மதிப்பீட்டுப் பணிகள் நடத்தப்படவுள்ளன.

விடைத்தாள் மதிப்பிடும் பணி கடந்த வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பணியை வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் பணி ஆரம்பிக்கப்படவில்லை.

இப்பணி இங்கு ஆரம்பிக்கப்படாமை தொடர்பாக கேட்டபோதே யாழ்.வலய வட்டாரங்கள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

அவை மேலும் தெரிவிக்கையில் -

இன்னும் ஓரிரு தினங்களில் விடைத்தாள் பொதிகளை விமானம் மூலம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சகர்களுக்கான கடிதங்கள் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். எதிர்வரும் 5ஆம் திகதியளவில் இந்தப் பணி ஆரம்பிக்கப்படலாம்.

எனவே, பரீட்சகர் அணிக்கு விண்ணப்பித்தவர்கள் இதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203-88)

## சட்டவிரோத மின் பாவனை கைதடிப் பகுதியில் தீவிரம்

கைதடி,ஜன.2

சட்ட விரோதமாக இணைப்புகளைப் பெற்று மின்சாரத்தை பெறுவோர்களின் எண்ணிக்கை கைதடி வடக்கு மற்றும் கைதடி நவபுரம் ஆகிய பகுதிகளில் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை வேளைகளில் நீண்ட தூரத்தில் இருந்து நிலத்தின் கீழான வயரை புதைத்து சட்டவிரோதமாக இப்பகுதி மக்கள் மின்சாரம் பெற்று வருகின்றனர்.

இதனால், வீதிகளால் பயணிப்போர் மின் தாக்கத்திற்குள்ளாக நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் உரியவர்கள் கவனமெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (203-75)

## கடற்றொழிலாளரின் பிரச்சினையை தீர்ப்பது குறித்து ஆலோசிக்க சமூக சேவைகள் அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.2

குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் தொழில்சார்ந்த அடிப்படைப் பிரச்சினைகள், அவர்களுக்கு இலவச நிவாரணம் வழங்கல் தொடர்பாக அதிகாரிகளுடன் விசேட மாநாடு ஒன்றை எதிர்வரும் 10ஆம் திகதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடத்தவுள்ளார்.

யாழ். அரச அதிபர், முப்படைகளின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், குடாநாட்டிலுள் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடகச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குடாநாட்டில் தற்போதைய சூழ்நிலையில் கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்து வரும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதன்போது கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி, கடலில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வள்ளங்களை மீளக் கொண்டுவருவதற்கான அனுமதி, தொழிலில் ஈடுபடும் காலம் வரை இலவச நிவாரணம் பெறல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள அமைச்சர், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நோக்குடன் இந்த மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார் - என்றுள்ளது. (203)

## மேலும் சில பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.2

குடாநாட்டில் நடத்தப்பட்ட ஐந்தாம் தர விசேட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில பாடசாலை மாணவர்களின் விவரம் வருமாறு:

**மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலை**

இ.நிவேதிகா (141),

**நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி**

பா.கஜந்தன்(137)

**கல்வயல் ஸ்ரீ சண்மகனந்தா வித்தி.**

மு.மயூரன்(137),

**காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.**

தியாகராசா நிரோசன்(154), நித்தியானந்தம் பிரதீபன்(148), குணரத்தினம் தர்மிளா (146), கனகலிங்கம் சாந்தினி (144), பாலசுப்பிரமணியம் கேசாயினி(135)

**யா/ அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி**

இ.சர்மினி(141), அ.மாதங்கி(139), ஸ்ரீ.தபோதினி(138), வி.லகன்னியா(137), கி.கார்த்திகா(137), [illegible](135)

**நெல்லியடி மெதடிஸ்மிஷன் தமிழ் கலவன் பாடசாலை**

எஸ்.அனோசன்(161), எம்.கீர்த்தனா (157), கே.அபிரா(152), வை.சயந்தன் (152), வி.சத்தியப்பிரியன்(151), எஸ்.தனுசன்(149), கே.துசானி(148), கே.சாய்ரூபன்(147), பி.மயூரிகா(146), எஸ்.இராஜமனோகரி(142), எஸ்.சிந்துஜன்(140), ரி.நிஷாருஜா(138), ரி.தனேந்திரன்(138), சீ.சங்கவி (137), ஏ.கோபினி(136), பி.நிருஷன் (135), எஸ்.விதுர்சா(134), ஆர்.சகானா(133), என்.திருபரன்(133), என்.துசானி(133), ஈ.துசாரா (133), ரி.காயத்திரி(133)-

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

பிரபாகரன் பிரவிந்(167), ஜெயாநந்தன் மனோஜ்(160), கானப்பிரியா வீரகுமார் (155), நகுலேந்திரன் நவராஜன்(152), பிரியங்கா உதயகுமார்(152), சாம்பவி ஞானேஸ்வரன்(151), திவ்வியா சந்திரலிங்கம்(148), உதயகுமார் உமைரதன்(146), கார்த்திகா இராஜேந்திரன் (145), தேவதாஸ் கௌதம்(145), சிவாநந்தம் கிருஷன்(145), லோகேஸ்வரன் மாதவரூபன் (140), சுத்தாநந்தன் கஜீந் (140), டிலக்ஷனா பன்னீர்செல்வம் (140), கிருஷ்ணவேணி யோகராஜா (140), [illegible]ஜோதி சர்வோதயசிவம்(140), [illegible]சகர் மகிந்தன்(134), ரெஜித்தா மனோகர் (134), ஸ்கந்தராஜா அச்சுதன் (133). (203-11-73)

## செய்திக் கொத்து

### வல்லையில் நிழல் பந்தல்

உடுப்பிட்டி,ஜன.2

வல்லைவெளி இராணுவ சோதனைச் சாவடியில் படையினரால் நிழல் பந்தல் போடப்பட்டுள்ளது.

வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பயணம் செய்யும் பயணிகளின் நன்மை கருதி இந்தப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிச் சந்தியில் உள்ள சோதனைச் சாவடி ஓரமாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. (203-155)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.2

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (203)

### கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான மாதாந்த கருத்தரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று சமூக நலன் புரித்திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (203-75)

### பரசிற்றமோல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். றோட்டறிக் கழக அனுசரணையுடன் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் இன்று காலை முதல் பரசிற்றமோல் விநியோகம் இடம்பெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகம் இடம்பெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

### சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறக்கொடை விழா

தெல்லிப்பழை,ஜன.2

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 82 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அறநிதிய அறக்கொடை விழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர்கள் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பா.இராமச்சந்திரன், சங்கீதபூசணம் செல்வி கதிர்காமர் நாகம்மா, பண்டிதர் க.நாலிங்கம், தி.சுந்தரமூர்த்தி ஆகிய முதியவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் வடமராட்சி வலயத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உயர் கல்வி கற்கும் நூறு மாணவர்களிற்கான கல்வி உதவித் தொகையாக இரண்டு லட்சம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

### சவர 'பிளேட்டு'களுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.2

குடாநாட்டில் தற்போது 'பிளேட்' வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. ஏ9 பாதை மூடப்பட்டுள்ளதால் குடாநாட்டில் நிலவும் பொருள் தட்டுப்பாட்டால் பிளேட் வகைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக சிகையலங்கரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முகச்சவரம் செய்வதற்காக ஒரு பிளேட்டை பலருக்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்று சிகை அலங்கரிப்ப வர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் குருதித் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப)

### முதலுதவிப் பெட்டிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் கைதடி, நாவற்குழி பிரதேசங்களுக்குட்பட்ட கிராமங்களுக்கு மாதர் சங்கங்கள் ஊடாக முதலுதவிப் பெட்டிகளும் அவற்றைக் கையாளுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமையில் முதலுதவிப் பெட்டிகள் மாதர் சங்கப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
**வ-இந்துஜன்**
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2006இல்
144 புள்ளிகள் பெற்ற இவரை
பல கலையும் பெற்று
பல்லாண்டு காலம் வளர்க என எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமா குடும்பம் (நியூசிலாந்து), அன்ரா குடும்பம் (திருநெல்வேலி), கலாச்சித்தி குடும்பம் (இங்கிலாந்து), பாமாச்சித்தி குடும்பம் (ஆஸ்திரேலியா), மற்றும் அப்பம்மா, பெரியத்தை குடும்பம், சின்னத்தை குடும்பம், சுதர்சினி அக்கா.

பொற்பதி லேன், கொக்குவில். (63379)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்




அமரர்
**கந்தையா சின்னத்தம்பி**
(முன்னாள் ஒய்வுபெற்ற தபால் ஊழியர் - மண்டைதீவு)

அன்னையின் மடியில் 04*06*1910 — ஆண்டவன் அடியில் 13*01*2006

அன்பான பேச்சு அழகான சிரிப்பு
துன்பத்தையும் இன்பமாக ஏற்றுக்கொள்ளும் நீர்
எம்மை எல்லாம் துயரில் ஆழ்த்தி - இறைவனடி
சேர்ந்துவிட்டீர் உம் நினைவால் வாடுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

82/7, கன்ம வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (65379)
உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 * 08 * 1932 — உதிர்வு 13 * 01 * 2006

**அமரர் வீரசிங்கம் சோமசுந்தரம் (B.A.)**
(ஓய்வுபெற்ற உபஅதிபர் - கோப்பாய், கிறிஸ்தவ கல்லூரி)
திதி: 2007 - 01 - 02

நீங்காத உம் நினைவோ டோராண்டு சென்றதையா -இனமகள்
தாங்காது கண்ணீரை வழிந்தோட விடும் -போதும்
தூங்காத உணர்வோடெம் வாழ்வுப் பயணம் உங்கள் வழிகாட்டலில் அமைதி பெறுக.

இராஜ வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (63348) - குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 * 11 * 1910 — மறைவு 02 * 01 * 2005

**அமரர் க.முருகேசு**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்பு என்னும் தேன் சொரிந்து
அறிவு என்னும் ஒளி தந்தீர்
துன்பம் இன்றி நாம் வாழ
தூய நல்லவை செய்து வைத்தீர்
இன்பம் நிறைந்த இல் வாழ்வில்
அன்பும் அறனும் உடைத்தென்றீர்
இந்த மொழிகள் எம் காதில்
என்றும்கேட்கும் எம் உயிரே.

'ஆனந்தகானம்' ஆவரங்கால், புத்தூர். (63375) - குடும்பத்தினர்.

# நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி



உதயம் 23 * 11 * 1933 — அஸ்தமனம் 13 * 01 * 2006

**அமரர் மாரிமுத்து காங்கேசன் (காசி)**
(இளைப்பாறிய புகையிரத திணைக்கள ஊழியர்)
திதி: சதுர்த்தசி 02.01.2007

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்துயர்
அன்பு மழை பொழிந்து எம்மை பாசத்தின் சுமையோடு
அரவணைத்த அன்புத் தெய்வமே எம்மைவிட்டுப் பிரிந்து
ஓராண்டு மறைந்தாலும் என்றும் கலையாத நினைவுகளுடன்
எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (63383)

இன்று (02.01.2007) செவ்வாய்க்கிழமை பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'தேவி இல்லம்'
நாவலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொ.பே.இல. 0776569738, 021 222 2193

என்றும் நீங்காத் துயருடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரர்கள்.

## வீடு விற்பனைக்கு

இராசாவின் தோட்ட வீதியில், 2 1/2 பரப்புக் காணியில் பொஸ்கோ பாடசாலை, Convent மற்றும் கோயில்கள் என்பவற்றிற்கு அண்மித்ததாக, சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: *இல.49, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.*

## பெயர் மாற்றம்

கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த *திவ்வியரட்ணம் நவரட்ணம்* ஆகிய நான் 01.01.2007 அன்று தொடக்கம் எனது பெயரை *திவ்வியரட்ணம் உமாசங்கர்* என மாற்றிக்கொள்வதுடன் இனி எந்த ...ார் ஆவணத்திலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

தி-உமாசங்கர்.

# எமது கண்கள் சொரியும் அருவிகளுடன் உமது ஓராண்டு



உசனைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி மல்லிகாதேவி ஜெயராசா (ரஞ்சினி)**

அன்னை அரவணைப்பில் 23.10.1962 — ஆண்டவன் அரவணைப்பில் 13.01.2006

திதி: சதுர்த்தசி

உமது குரல் கேட்டு முகம் பார்த்து விழித்த
கண்களில் இடி விழுந்ததேனோ
உள்ளத்தில் பதிந்த உமது உயர்ந்த
அன்பைத் தேடுகின்றோம்
பாசத்தாய் என்ற பெயருக்கு அத்திபாரமாய்
இருந்து ஒளிதந்த குலவிளக்கே
பட்டாம்பூச்சியைப் போல் எம்மோடு பறந்து வீட்டு
பாதியிலே எம்மைத் தனியாக பறக்கவிட்டுச் சென்றீரே
நாவொன்று போதாது உமது அன்பையும்
அரவணைப்பையும் வர்ணிப்பதற்கு சித்தியா
தாயிழந்த பறவைகள் போல் நடுத்தெருவில்
உமைத் தேடுகின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

விடத்தற்பளை, மிருசுவில். (அ-51731)
கந்தசாமி (மைத்துனர்), நகுலாதேவி (தங்கை), பெறாமக்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பஞ்சலிங்கம்**
*(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)*

தோற்றம் 30-08-1928 — மறைவு 03-12-2006

03.12.2006 அன்று எம்மை எல்லாம் ஆறாத் துயரில் மூழ்கவிட்டுச் சென்ற எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லிங்கமகால், தாவடி வடக்கு, கொக்குவில் - குடும்பத்தினர். (65395)

# 2ஆம் அண்டு நினைவஞ்சலி



அமரர்
**சரவணமுத்து இரத்தினபூபதி**

மலர்வு 27.04.1938 — உதிர்வு 02.01.2005

திதி: 09.01.2007

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் இதயவேதனைகள்
ஆறுதல்கூறும் அன்புநிறை தெய்வமே
இன்று ஆறுதலின்றித் தவிக்கின்றோம்.

கல்வியங்காடு. (65998)
தகவல்: சரவணமுத்து குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியைகளும் அழைப்பும்



**திருமதி யோகம்மா மகாலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

தோற்றம் 24.01.1916 — மறைவு 04.12.2006


பத்து மாதங்கள் எமைச் சுமந்து
பாலாக உதிரத்தை எமக்களித்து,
உத்தமமான பிள்ளைகளாய் எம்முடன்
ஊர்ப் பிள்ளைகளும் வாழக் கல்வி ஊட்டிய உத்தமியே!
ஆன்மா சாந்திபெற இறையடி வேண்டுகிறோம்.

மரணச் செய்தி கேட்டு தொலைபேசி, துண்டுப்பிரசுரம் ஆகியவற்றின் மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (02.01.2007) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (03.01.2007) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

செம்பிமா, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
**பூதப்பிள்ளை காசிலிங்கம்**



மண்ணில் 02.06.1923 — விண்ணில் 03.12.2006

அன்பின் திருவுருவே
ஆருயிர் அப்பாவே
இவ்வுலகில் உங்கள் ஆயுள் நூற்றாண்டு
என்ற நினைவில் வாழ்ந்தோம்
ஆனால் ஒரு நொடிப் பொழுதில்
எம்மையெல்லாம் விட்டுச் சென்று விட்டீர்கள்
இனி எங்களுக்கு ஆறுதல் யாரப்பா?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பலாலி தெற்கு, வயாவிளான். (65232)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**பொன்னையா தருமராசா**
(ஓய்வுபெற்ற சிறாப்பர்)

மண்ணுலகிற்கு 20.11.1937 — விண்ணுலகிற்கு 02.12.2006

எம்மைவிட்டு நீர் பிரிந்த காலங்கள் ஓடினாலும்
இமை வரைக்கும் உம் நினைவு
என்றைக்கும் நிறைந்திருக்கும்

நல்லூர் வடக்கு. (65314)
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## *கந்தசாமி நவமணி*



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஜேர்மன் பேர்லினை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி நவமணி (பரமேஸ்வரி) 28.12.2006 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தசாமியின் மனைவியும்காலஞ்சென்ற ராமநாதன் - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கோவிந்துகுமாரு - விசாலாட்சிதம்பதியரின் மருமகளும் அன்னபூரணம், புவனேஸ்வரி, கனகேஸ்வரி, வில்வநாதன் காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம், குமாரசாமி, கிருஷ்ணபிள்ளை, பங்கையற்செல்வி, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான பாக்கியம், வல்லிபுரம், நடராசா, நல்லையா, நல்லம்மா, கொழும்புகனகசுந்தரம், யாழ்ப்பாணம் சோமசுந்தரம் ஆகியோரின் அன்புமைத்துனியும் ஜெயலதா, ஜெயபாலன், ஜெயகுமார், ஜெயராணி, பிரியதர்சன் ஆகியோரின் தாயும் மகேஸ்வரன், விக்னேஸ்வரி, சண்முகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் மாமியும் லாவண்யா, லவன், சரண்யா, விதுசன், வினோயா, ஜெனன், சகானா, பானுசன், மதுஷன், மிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியை நாளை 03.01.2007ஜேர்மன் பேர்லினில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தொ.பே: 0049 03039101261*
*ஜேர்மன்.*
தகவல்: குடும்பத்தினர்.
கணவர் கந்தசாமி (கிட்டு), புங்குடுதீவு.

## *திருமதி நளாயினிதேவி நல்லலிங்கம்*



காரைநகர், மாப்பானலூரியைப் பிறப்பிடமாகவும்நீதிமன்ற வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நளாயினிதேவி நல்லலிங்கம் 31.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - சுந்தரம்மா தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற முருகேசு - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் நல்லலிங்கத்தின் (ஓய்வுபெற்ற கணக்காளர்) அன்பு மனைவியும் சறோஜினிதேவி, நடனலிங்கம்(பிறிமா கம்பனி- திருகோணமலை), றஞ்சினிதேவி(கூட்டுறவு பரிசோதகர் - திருகோணமலை), பஞ்சலிங்கம் (சுவீடன்), சாந்தினிதேவி (ஆசிரியர், கோணேஸ்வரா இந்துக் கல்லூரி - திருகோணமலை), யாதவன்(கனடா), மாதவன்(கனடா) ஆகியோரின்அன்புத் தாயும் கனகஞானம்(கிராம சேவையாளர், பன்குளம்), ஜெயலக்சுமி, செல்வராசா, கிருஸ்ணவேணி(சுவீடன்), ரமணீகரன்(விரிவுரையாளர், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி), திரிபுவனி(கனடா),அமுதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பிரசாத், வேணுகா, டிலானி, லோஜனா, தர்ஷிகா, நிதுஸ்கரன்,கோபிகிருஸ்ணா(கனடா),சரணியா(கனடா), ஷாருஜா(கனடா), காயத்திரி(சுவீடன்),வேணுகானன் (சுவீடன்), பவித்ரா (சுவீடன்), வருணி(கனடா) ஆகியோரின் பேர்த்தியும்காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, சபாபதிப்பிள்ளை, சாம்பவமூர்த்தி, கந்தையாபிள்ளை, நித்தியலட்சுமி மற்றும் தனலட்சுமி(கனடா), அபிராமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி இராஜேஸ்வரி மற்றும் பராசக்தி, சரஸ்வதி, சுப்பிரமணியம்(கனடா), கேதீஸ்வரதாசன்(முந்தல்), சிவமலர், மரகதவல்லி,சுந்தரலிங்கம்,பரராஜலிங்கம்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகதிருகோணமலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38/1, நீதிமன்ற வீதி,*
*திருகோணமலை.*
*026 222 5909*
தகவல்:
திருமதி சி.கந்தையாபிள்ளை
நடுத்தெரு, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## அமெரிக்கக் கைக்கூலி அரசினால் அவசரத்தில் தீர்ப்பு; ஆத்திரத்தில் அநீதி

பெருநாள் கொண்டாட்டங்களில் உலகம் மூழ்கியிருந்த சமயத்தில் சர்வதேசத்தையும் ஆத்திரத்திலும், எரிச்சலிலும், சோகத்திலும் ஆழ்த்தும் கெடுநாளாக அதை மாற்றியிருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'எடுபிடியா'யாக விளங்கும் ஈராக்கின் தற்போதைய அரசு.

ஒரு புறம் உலகுக்காகப் பாடுகளைச் சுமந்த உத்தமர் இயேசுவின் பிறப்பை நினைப்பூட்டும் கிறிஸ்மஸும் அதைத் தொடர்ந்து வரும் புதுவருடப் பிறப்புமாகப் பண்டிகை நாள்கள். மறுபுறம், உலக முஸ்லிம்களின் தியாகத் திருநாளாம் ஹஜ் பெருநாள்.

இவற்றுக்கு இடையே, முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கு அவசர அவசரமாக மரண தண்டனை நிறைவேற்றி உலகையே அதிர்ச்சிக்குள்ளும், ஆத்திரத்துக்குள்ளும், துயரத்துக்குள்ளும் ஆழ்த்தி யிருக்கிறது ஈராக்கின் பொம்மை அரசு.

அமெரிக்கக் கைக்கூலியாக - கைப்பொம்மையாக - ஏகாதிபத்திய எஜமானனின் தாளத்துக்கு ஆடும் ஈராக்கிய அரசிடமிருந்து இந்தப் போக்கு எதிர்பார்க்கப்பட்டதுதான்.

சதாம் ஹுசைன், தமது ஆட்சிக் காலத்தில் தவறிழைத்திருக்கலாம். மனித குலத்துக்கு எதிராகக் கொடூரங்களைப் புரிந்திருக்கலாம். அல்லது அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றமை போல அவர் நீதி, நியாயமாக நடந்து கொண்ட அரசுத் தலைவராகக் கூட இருக்கலாம்.

எது, எப்படியென்றாலும், அவர் விடயத்தில் ஈராக்கிய கைப்பொம்மை அரசு ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்ட முறைமையும், அதை ஆட்சி அதிகாரத்தில் அமர்த்துவதற்கு 'உலகப் பொலிஸ்காரனான' அமெரிக்கா புரிந்த ஆக்கிரமிப்பு அட்டூழியங்களும், சதாம் ஹுசைனின் கடந்த கால செயற்பாடுகள் குறித்து நீதியான விசாரணையை முன்னெடுப்பதற்கோ, நியாயமான தண்டனையை விதிப்பதற்கோ, அதை செயற்படுத்துவதற்கோ உரிய தகுதியை - அல்லது சட்டத் தகைமையை - அவற்றுக்கு இல்லாமல் செய்து விட்டன என்பதே உலகின் பொதுவான அபிப்பிராயமாகும்.

ஏகாதிபத்திய சக்திகளின் ஒரு தலைப்பட்சமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட நிலையில் -

அரசுத் தலைவராக இருந்த சதாமைக் கைது செய்து, சிறையில் அடைத்து விட்டு, அவரது 'பாத்' கட்சியைத் தடை செய்து, அடக்கி, ஒடுக்கி, அக்கட்சி மீது மக்களுக்கு உள்ள செல்வாக்குக் குறித்து ஜனநாயக வழியில் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை முற்று முழுதாக அடைத்து மூடச் செய்து விட்டு -

அமெரிக்கா நடத்திய 'ஜனநாயக' நாடகத்தில் அதிகாரம் ஏறியவர்களே ஈராக்கின் இன்றைய ஆட்சியாளர்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

சதாமின் ஆட்சியில் ஜனநாயகம் மறுக்கப்பட்டது, நீதி அடைக்கப் பட்டது, சர்வாதிகாரம் கோலோச்சியது என்றெல்லாம் அமெரிக்கத் தாளத்துக்கு ஏற்ப பல்லவி பாடும் ஈராக்கின் இன்றைய ஆட்சியாளர் கள், சதாமின் 'பாத்' கட்சிக்கான ஜனநாயக உரிமைகளை மறுத்து, அதன் மீது ஏறித்தான் தாங்கள் அதிகாரத்துக்கு வந்தார்கள் என்பதை மறந்து விட்டமை ஆச்சரியத்துக்குரியது.

சதாம் விடயத்தில் அவர்கள் நடத்திய நீதி விசாரணை நாடகம் ஒன்றும் சதாம் கால நீதி விசாரணைக்கு மேம்பட்டதல்ல என்பதும் உலகறிந்த உண்மைதான்.

எனவே, சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை நிறைவேற்றிய செயற்பாடு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியிருக்கின்றமை போல ''அவசரத்தில் தீர்ப்பு; ஆத்திரத்தில் அநீதி'' என்ற அவ சர, ஆத்திர நடவடிக்கைதான். அதில் சந்தேகம் ஏதுமில்லை.

இந்த விவகாரத்தில் உலகின் கருத்தை இந்திய அரசுத் தலைமை யும் பிரதிபலித்திருக்கின்றது.

''இந்தச் சம்பவமானது மிக்க ஏமாற்றத்தைத் தந்த துரதிஷ்ட வசமான நிகழ்வு'' என்ற இந்தியாவின் அதிருப்தியே உலக மக்களின் பெரும்பான்மையினரின் மனக் குமுறலுமாகும்.

எரிபொருள் மூல வளத்தில் உலகின் இரண்டாவது பெரிய சொத்துக் கொண்ட நாடு ஈராக். அந்த மூலவளத்தைச் சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியவாதிகள் கூட்டாக நடத்தும் ஏமாற்று நாடகத்தின் ஓர் அங்கமே சதாம் ஹுசைனின் ஆட்சி, ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் கவிழ்க்கப்பட்டமையாகும். அதன் மற்றொரு திருப்பமாக இப்போது சதாம் ஹுசைன் கழுவேற்றப்பட்டிருக்கின்றார்.

ஆனால், இந்தக் கொடூரம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இன்று கொண்டாட்டத்தைத் தரும் நிகழ்வாக அமைந்திருக்கலாம். ஆனால், உலக அரங்கில் இத்தகைய ஒரு தலைப்பட்சமான அராஜகப் போக்கு ஏற்படுத்தப் போகின்ற விளைவுகள் ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்பார்ப்புக்கும், விருப்புக்கும் மாறானவையாக அமையப் போகின்றன என்பது திண்ணம். அதுவே யதார்த்தம். அதை அவர்கள் புரியாமல் இருப்பதுதான் ஆச்சரியத்துக்குரியது.

சதாமுக்கு மரண தண்டனை நிறைவேற்றிய செயற்பாடும், இஸ்லாமிய உலகில் அது ஏற்படுத்தியிருக்கும் அதிர்ச்சி அலைகளும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இஸ்லாமியப் புரட்சிப் போக்கை மேலும் தீவிரமடைய வைத்து, வெறிகொள்ளத் தூண்டி, வேண்டாத விபரீதங்களுக்கு வித்திடச் செய்து விடலாம் என்ற ஆபத்து நிலை உருவாகியிருப்பதை நாம் ஒதுக்கிவிட முடியாது.

வினையை விதைக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்புலத்தில் இயங்கும் ஈராக்கின் தற்போதைய அரசு. அமெரிக்காவும் அதன் நேச ஏகாதிபத்திய சக்திகளும், அவற்றின் கைக்கூலியான ஈராக்கின் தற்போதைய அரசும் விதைத்தவற்றை அறுத்தே தீர வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

## எல்லாவகை இரத்தத்துக்கும் தட்டுப்பாடு; தானம் செய்யுமாறு மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா வகையான இரத்தத்திற்கும் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இரத்த வங்கி வைத்திய அதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் இதனைத் தெரிவித்துள்ளார். இரத்ததானம் செய்ய விரும்புபவர்களை உடனடியாக இரத்த வங்கிக்கு வந்து இரத்த தானம் செய்து உதவுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (1-203)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

குருநகர், ஜன.2

யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச பாடசாலைகளும் முதலாம் தவணைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன. இவ்வருடம் ஏப்ரல் 5ஆம் திகதி வரை முதலாம் தவணைக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறும்.(1-51)

## தனியார் வைத்தியசாலைகளின் உரிமையாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தனியார் வைத்தியசாலைகளின் உரிமையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-203)

## புத்தாண்டு ஆரவாரமின்றி பிறந்தது குடாநாட்டில்...!

### நள்ளிரவுத் திருப்பலிகள் இடம்பெறவில்லை

குடாநாட்டில் ஆடம்பரங்கள், ஆரவாரங்கள் இன்றி நேற்று மிக அமைதியாகப் பிறந்தது. நள்ளிரவுத் திருப்பலிகள் இடம்பெறாமலே குடாநாட்டில் புத்தாண்டு பிறந்தது.

குடாநாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மிக அமைதியாகப் புத்தாண்டை வரவேற்றனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை மற்றும் ஏ-9 தரைவழிப் பாதை மூடப்பட்டதன் காரணமாக குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை பல வகைகளிலும் பாதிக்கப்பட்ட நிலையில் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இந்நிலையில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குத் தேவையான எந்தவொரு பொருள்களையும் போதியளவு பெறமுடியாத நிலையில் மக்கள் மிகவும் அமைதியாகவும் எளிமையாகவும் புத்தாண்டை வரவேற்றனர்.

குடாநாட்டின் தேவாலயங்களில் நேற்று அதிகாலை புத்தாண்டை வரவேற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. பிறக்கும் புத்தாண்டில் ஒரு நிலையான சமாதான வாழ்வு கிடைக்க வேண்டும் என்றும், வன் செயல்கள் முடிவுக்கு வரவேண்டும் எனவும் வழிபாடுகளில் கலந்து கொண்ட மக்கள் விசேடமாகப் பிரார்த்தித்தனர்.

நள்ளிரவு ஊரடங்கு நீக்கப்பட்ட அறிவித்தல் தாமதமாக வெளியானதால் நள்ளிரவுப் பூசைகள் தேவாலயங்களில் இடம்பெறாதிருந்தமை பெரும் குறைபாட்டையும் அதிருப்தி உணர்வலையையும் உண்டாக்கியது. (அ-1-8-51)

## இணைப்புக் குறித்த ஆலோசனை எதனையும் ஐ.தே.கட்சி உடனடியாக முன்வைக்காது!

### தேவையைப் பொறுத்து முடிவு என்கின்றார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஜன. 2

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்த எதுவித ஆலோசனைகளையும் ஐ.தே. கட்சி சர்வ கட்சி பிரதிநிதிகளின் மாநாட்டில் முன்வைக்காதென அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஐ.தே.கட்சி கொள்கையளவில் எதுவித முடிவுகளையும் எடுக்கவில்லை. தேவையான நேரத்தில் கட்சி இது குறித்து முடிவெடுக்கும்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஆலோசனைகளைத் தயாரிக்கவென நியமிக்கப்பட்ட சர்வ கட்சி பிரதிநிதிகள் மாநாட்டிற்கு ஐக்கிய தேசியக் கட்சி தனியான ஆலோசனை வரைவை முன்வைக்காது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டில் முன்வைக்கப்படும் ஆலோசனைகளிற்கு தேவைப்படின் ஐ.தே.கட்சி திருத்தங்களையே முன்வைக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகளின் அடுத்த மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி தனது தீர்வுயோசனைகளை முன்வைக்கும் எனவும்- வடக்கு - கிழக்கு மாகாணங்களை அடுத்த 8 முதல் 10 ஆண்டுகளுக்கு இணைத்து வைப்பது என்ற கட்சியின் நிலைப்பாடு அந்த யோசனையில் உள்ளடங்கியிருக்கும் எனவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.(ஐ)

## ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி

யாழ்ப்பாணம், ஜன.2

வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி நடைபெறவுள் ளது. திருவெம்பாவையை ஒட்டி வருடாந்தம் சிறப்பாக இடம்பெறும் தேர்த்திருவிழா இன்று காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும்.

நாளை புதன்கிழமை அதிகாலை 5மணிக்கு ஆருத்ரா தரிசனம் வழமை போல் விசேடமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

**மாணிக்கவாசகர் விழா**

இதேவேளை, வசந்த மண்டபத்தில் நடைபெறும் மாணிவாசகர் விழாவில் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8மணிக்கு பண்டிதர் மு.சு.வேலாயுதம் தலைமையில் ஆரம்பமாகும்.

சங்கீத பூசணம் அ.கணபதிப்பிள்ளை வழங்கும் திருவாசக இசைவிருந்தைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

மூத்த சமய விரிவுரையாளர் செஞ்சொற் கொண்டல் சபாரத்தின ஈஸ்வரசர்மா ''உய்யக் கொண்ட நின் கருணை'' எனும் தலைப்பிலும், வே.நடராசா ''திருவாசகமும் திருவெம்பாவையும்'' என்னும் பொருளிலும் உரையாற்றுவர். .(அ)

### நாளை

மார்கழி - 19
புதன்கிழமை
03.01.2007
திதி :பூரணை
முன்னிரவு 8.17
நட்சத்திரம் : திருவாதிரை
பூரணை விரதம்
முன்னிரவு 10.29
சுபநேரம் : 5.00 - 6.30
இராகுகாலம் : 12.30 - 2.00

## மண்டூரில் அதிரடிப்படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

### விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்

கொழும்பு, ஜன.2.

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியைத் தாங்கள் முறியடித்து விட்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முறியடிப்புச் சமரில் அதிரடிப் படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மண்டூர் 38 ஆம் கிராமப் பகுதியின் ஊடாக ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் விசேட அதிரடிப்படையினருடன், துணை இராணுவக் குழுவினரும் இணைந்து முன் னேற்ற முயற்சியினை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகள் தீவிர தாக்கு தலை நடத்தி அவர்களது முயற்சியினை முறியடித்துள்ளனர். - என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சாவகச்சேரியில் மண்எண்ணெய் விநியோகம்

தென்மராட்சி, ஜன.2

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடைகளில் இன்று தொடக்கம் சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் இரண்டு லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கப்படுமென தெரிவிக்கப் பட்டுள்ளளது.

## மட்டக்களப்பில் நள்ளிரவு ஷெல் வீச்சு

கொழும்பு, ஜன.2

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு, கறுத்தப் பாலம், ரமேஷ் புரம் ஆகிய பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற் கொண்டனர் என்று தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்தது.

புத்தாண்டு பிறக்கும் வேளையான அதிகாலை 12.15 மணியளவில் - ஒரே நேரத்தில் - இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் இராணு வத் தினர் இத் தாக்குதலை முறியடித்ததாகவும் தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ)

## வங்கிகளில் வாடிக்கையாளர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* குடாநாட்டுக்குத் தேவையான அளவு மண்எண்ணெய், டீசல், பெற்றோல் கிடைத்துள்ளது. இதனால் 24 மணிநேரமும் மின்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

* யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர்கள் சிலர் இங்கு வந்து கடமையேற்க மறுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் தொடர்பான விவரங்களைத் தந்தால், அது குறித்து நடவடிக்கை எடுப்பதாகத் தளபதி தெரிவித்தார்.

* தேவையான அளவு ஒக்சிஜன் சிலிண்டர்கள் கிடைத்துள்ளன என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். வைத்திய சாலைகளுக்கு வேறு தேவை இருப்பின் இருவாரங்களுக்கு முன் அறியத்தருமாறு அறிவுறுத்தப்பட்டது.

* பொற்பதி, மணற்காடு ஆகிய இடங்களில் அமைக்கப்படும் வைத்திய மத்திய நிலையங்களின் கட்டட வேலைகளைப் பூர்த்திசெய்ய அனுமதிக்குமாறு கோரப்பட்டது. அது சம்பந்தமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

* தொண்டை மானாறு வீதி அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க படைத்தளபதி அனுமதி வழங்கினார்.

* வங்கிகளின் செயற்பாடுகள் ஒரு மணிவரை தற்சமயம் நடைபெறுகின்றன. மேலும் ஒருமணிநேரம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. வங்கிகளுக்கு தேவையான உபகரணங்களை விமானம் மூலம் எடுத்துவந்து வழங்குவதாக படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

* தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் குழாய்களின் அடைப்புகளை சுத்திகரிக்க, தேவையான ஊழியர்களை அமர்த்த அனுமதி வழங்கப்பட்டது.

* கைத்தொலைபேசி சேவை மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. எனினும், கைத் தொலைபேசிப் பாவனை மூலம் அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாமல் கையாள வேண்டும். விரைவில் சி.டி.எம்.ஏ. வசதியுடைய தொலைபேசி இணைப்புகளும் வழங்கப்படும் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

* குடாநாட்டுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவற்றைக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் இன்று (2ஆம் திகதி) முதல் வழங்க முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு கிரான் பகுதியில் இளைஞர்கள் மூவர் படுகொலை

மட்டக்களப்பு,ஜன.2

மட்டக்களப்பு - கிரான் பகுதியில் 3 தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் சுட்டுக் கொலைசெய்யப் பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தக் கொலைச்சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலி ஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வாறு கொலைசெய்யப்பட்ட இளை ஞர்கள் வீரசிங்கம் செந்தூரன் (வயது-23), நவசிங்கம் கோணேஸ்வரன் (வயது - 22) மற்றும் மயூரன் (வயது - 22) ஆகியோர் என அடையாளங் காணப்பட்டுள்ளனர். கொல் லப்பட்ட இளைஞர்களில் ஒருவர்பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றவர் என்றும், மற்றைய இருவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த முக்கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயத்தை மேற் கொண்ட கூட்டமைப்பினர், தமிழக முதல்வர் மு. கருணாநிதியை டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி சந்தித்து வடக்கு - கிழக்கில் தமிழர் கள் அனுபவிக்கின்ற அவலநிலை பற்றி விளக்கினர்.

அதன் பின்பு 22 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித் துப் பேசினர். இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரியாமல் இணைந் திருக்க வேண்டும் என்பதை இந்தியா விரும்புகின்றது என்பதை மன்மோகன்சிங், கூட் டமைப்பினரிடம் தெரிவித்திருந்தார்.

மன்மோகன் சிங்குடனான சந்திப் பின் பெறுபேறுகள் பற்றி அறிவதற்காகக் கரு ணாநிதி மீண்டும் டிசம்பர் 24 ஆம் திகதி கூட்டமைப்பினரைச் சந்தித்தார். அச்சந் திப்பின்போது இலங்கை அரசால் கிழக்கிற் குத் தனியாக ஆளுநர் ஒருவர் நியமிக்கப் பட் டதையும் வடக்கு - கிழக்கில் மூன்று நிர்வாக அலகுகளை உருவாக்க அரசு முயற்சிப்பது பற்றியும் கூட்டமைப்பினர், கருணாநிதிக்கு எடுத்துக் கூறியதோடு அவை தொடர்பான தமது எதிர்ப்பையும் அவரிடம் வெளியிட்டனர்.

டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி 'வாழும் கலை' ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி யைச் சந்தித்து உரையாடினர். இச்சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை கூட்டமைப்பினர் நாடு திரும்பினர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந் தர், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் கூட்டமைப்பில் அடங்கியிருந்தனர். (ஐ)

## நிபுணர் குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்த யோசனைகள் குறித்து வாதப் பிரதிவாதங்கள் உண்டாகி இருப்பது தெரிந்ததே.

சமஷ்டி முறையிலான கூடுதல் அதிகா ரப் பகிர்வு குறித்துச் சிபார்சு செய்துள்ள குழு 'ஏ' யின் அறிக்கையில் இருந்து அரசு தூர விலகி நிற்பதும், ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகிய கட்சிகள் அந்த அறிக் கையை நிராகரித்திருப்பதாலும் பெரும் அரசியல் சர்ச்சை தோன்றியுள்ளது.

அதன் விளைவாக, கடந்தமாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெற்ற நிபுணர் குழுவின் கூட்டம் பெரும் குழப்பமான சூழ்நிலையில், அடுத்த கூட் டத்திற்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்ப டாமல் முடிவுற்றது.

அதனைத் தொடர்ந்து தனது பங்கு, பதவி என்ன என்பதைத் தெளிவுபடுத்து மாறு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு விடம், நிபுணர்கள் குழு கேட்டிருக்கிறது.

அநேகமாக நிபுணர்குழுவின் இயக் கம் முடங்கிவிடக்கூடும் என்று அவதா னிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (அ)

## போர்நிறுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது செயற்பாடுகளை மாற்றிய மைப் பது குறித்த பயிற்சிப் பட்டறை ஒன்றை இந்த மாதத் தொடக்கத்தில் கண்காணிப்புக் குழு நடத்தவுள்ளது.

பயிற்சிப் [illegible] றை நடைபெறும் சமயத்தில் [illegible]புக் குழுவின் மாவட்ட அலுவலகங்கள் திறந்தேயிருக் கும். கண்காணிப்பு நடவடிக்கை கள் முற் றாக நிறுத்தப்படாவிட்டாலும் குறைக்கப் படும்.

எனினும், மாற்றுத்திட்டங்கள் எதுவும் இல்லாமல் கண்காணிப்புக் குழு தனது நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டு குழுவினர் கொழும்பில் கூடுவதற்கு முடி வெடுத்திருப்பதை அரசு கடுமையாக ஆட் சேபிக்கிறது என்று அரச சமாதானச் செய லகப் பணிப்பாளர் பாலித கொஹொன்ன கூறியுள்ளார். இது தொடர்பில் தனது செயலகம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவினர்தமது நடவ டிக்கைகளைக் குறைத்துக் கொள்ளும் காலத்தில் இரு தரப்பும் போர் நிறுத்த உடன்பாட்டை மீறக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

மேலும் வாகரையைக் கைப்பற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கை யும் மும்முரமடையக் கூடும் என்றும் அச்சம் எழுந்துள்ளது.

எனினும், இலங்கையில் தமது நிலைப் பாடு குறித்து உட்கார்ந்து பேச வேண்டிய கட்டாயம் குழுவுக்கு ஏற்பட்டுள்ளது என்று குழுவின் பேச்சாளர் கூறினார். (ஐ)

## இரு தரப்பையும் பொதுவாகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறை விடுத்துள்ள புத்தாண் டுச் செய்தியில் மேலும் தெரி விக்கப்பட் டிருப்பதாவது:-

2006 ஆம் ஆண்டு முழுவதிலும், இலங் கைத் தீவில் நிரந்தரமான சமாதானத்தைத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகவும், உறுதியா கவும் கோரி வந்தனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழு அள வில் அமுல்படுத்துவதன் ஊடாகவே இந்த இலக்கையடையலாம், அடைய முடியும் என்று அவர்கள் நம்பினர். இதன் பிரதிபலிப் பாகவே விடுதலைப் புலிகளும் தொடர்ச்சி யாக முழு அளவில் போர் நிறுத்த ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்தக் கோரிவந்த னர்.

ஒக்டோபர் 28 ஆம் திகதி ஜெனி வாப் பேச்சுகளின் ஆரம்ப நாள் உரை யில் தமி ழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்து றைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல் வன், ''சர்வதேச சமூகத்தையும், இணைத் தலைமை நாடுகளையும், நோர்வே அனு சரணையாளர்களையும் போர் நிறுத்த உடன் பாட்டை நூறு வீதம் நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக் குமாறு வேண்டுகிறோம். அத்தோடு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற் பாடுகளுக்கும் வலுச்சேர்க்குமாறு வேண்டு கின்றோம். இந்த நடவடிக்கைகள் மக்க ளின் வாழ்வில் இயல்புநிலையைக் கொண்டு வந்து சமாதான முயற்சிகளை முன்னெ டுத்து அதை ஒருதிருப்தியான முடிவுக்குக் கொண்டு வரும் என்று நாம் நம்புகின் றோம்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

டிசம்பர் 8 ஆம் திகதி நோர்வே சிறப் புத் தூதுவர் ஹன்ஸன் போவரைச் சந்தித்த பின்னர் விடுதலைப் புலிகள் வெளியிட்ட ஊடக அறிக்கையிலும் நிரந்தர சமாதா னமே வேண்டத்தக்க முடிவானால் இரு தரப்பினரும் கையெழுத்திட்டு நோர் வேயாலும், சர்வதேச சமூகத்தாலும் ஆதர வளிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நூறு வீதம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது.

இன்று தமிழ் மக்களை ஆழ்ந்த ஏமாற் றத்திற்குள் ஆழ்த்தி போர் நிறுத்த ஒப்பந் தம் உக்கிப்போய் உள்ளது. அதில் தெளி வாகக் குறிப்பிட்டிருந்த நிலங்களை, தமிழ் மக்களின் உயிர், உடைமைகளைப் பாரிய சேதங்களுக்கு உள்ளாக்கி ஸ்ரீலங்காப் படை யினர் ஆக்கிரமித்துள்ளனர்.

பெருந்தொகையான தமிழ் மக்களின் ஒரேயொரு தரை வழிப் பாதை களான 'ஏ-9' மற்றும் 'ஏ-15' பாதைகளை மூடி மக்களுக்குப் பாரிய மனிதாபிமான இழப்பு களை ஸ்ரீலங்கா அரசு உண்டாக்கியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப் படை ஆகக் கூறுகளில் ஒன்றான வடக்கு - கிழக்கு மாகாணம் துண்டு துண்டாக் கப்பட்டுள்ளது.

இதைவிட மோசமாகப் போர் நிறுத்த ஒப் பந்தத்தை மீற முடியுமா?

விலக இருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான், ஜனவரி 2005 இல் ஆழிப்பேரலை அழிவுகளைப் பார்வை யிடுவதற்காக இந்தத் தீவிற்கு வந்தபோது மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர் தாய கப் பிரதேசங்களுக்கு வரவிடாது அவர் தடுக்கப்பட்டார்.

ஆழிப்பேரலை மீள் கட்டுமானத் திற்கு சர்வதேச ஆதரவுடன் உண்டாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு குப்பைத் தொட் டிக்குள் எறியப்பட்டுள்ளது. இவ்வளவிற் கும் பின் ஐ.நா. செயலாளர் நாயகம், ஆழிப் பேரலை இரண்டாம் ஆண்டு நிறைவிற்கு விடுத்துள்ள அறிக்கையில், 'புது வன் முறைப் பேரலை' நிறுத்தப்பட வேண் டும் என்று போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அத்திவா ரத்தையே உடைத்த ஸ்ரீலங்கா அரசைக் கேட்காமல் அனைத்துத் தரப்பினரையும் கேட்டுள் ளார்.

தற்போது ராஜபக்ஷ அரசு திட்டமிட்ட வகையில் தமிழர்மீது போரையும் திணித்து, தமிழர் தாயகப் பிரதேசத்தில் இனச் சுத் திகரிப்பையும் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் சர்வதேச சமூகத் தி லிருந்து இரு தரப்புகளையும் பொதுவா கக் கணிப்பிடும் கருத்துகள் விரும்பிய பலனைத் தரமாட்டா.

உலகம் 2006 ஆம் ஆண்டைத் தெளி வாகப் புரிந்து கொண்டு, வரும் புத்தாண் டில் நிரந்தர சமாதானத்தை நீதியான அர சியல் தீர்வின் மூலம் அடைவதற்கு எடுக் கும் உண்மையான முயற்சிகளில் தம்மோடு சேர்ந்து நிற்கும் எனத் தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றார்கள். - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## அல்வாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூஜையில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பும்போதே கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தார். இவர் சிகிச் சைக்கென மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமுற்ற சிப்பாய் கள் இருவரும் பலாலி இராணுவ வைத் தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

திக்கம், மானாண்டிப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் ரோந்துசென்ற படையினருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடை யில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. சேதவிவரம் தெரியவரவில்லை.

(1-115-155)

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.
MCS Supported By UNDP/JRRP
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் பங்குபற்றலாம்.
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 05-01-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
A\L 2009
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்
06.01.2007 சனி
காலை 8 மணி.

2007.தரம்:5- வினாத்தாள்
2007தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான..
பிரதமபரீட்சகரும், அனுபவம் வாய்ந்தவருமான
திரு.கணேசலிங்கம் அவர்களின்..
20 வெற்றித்தேர்வு. 5 வெற்றிப்பாதைக்காய் தொடராக வெளிவரவுள்ளன. முதலாவது வெற்றித்தேர்வு இன்னும் ஓரிரு நாட்களில் வெளிவரும்.!!
வருகின்ற பிரதிகள் குறைவானவை என்பதால் முன்னரே தொலைபேசி மூலம் தொடர்புகொள்க
வலிகாமம், தீவகம், தென்மராட்சி, யாழ்நகரம்: 2229016
வடமராட்சி : 2263815
2007 தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான விசேட வகுப்பு அனுபவம் வாய்ந்த, பிரபல பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஆரம்பம்.
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக

CHEMISTRY CENTRE
Temple Rd. (Green Park அருகே)
INORGANIC
Wed, Fri 4.30 - 5.30
THERMO
Wed. 3.30 - 4.30
இவ்வாரத்துடன் அனுமதி நிறுத்தம்.
A/L 2009
ஆரம்பம் 05.01.2007
Fri. 3.30
By. அன்பழகன் B.Sc.

BRIGHTMAN
புதிய பிரிவு சரளமாக பேச, எழுத, வாசிக்க
பேராசிரியர் :- லீலாகிருஸ்ணன்
ஆரம்பம் :- 03.01.2007 3.30 Wed

வணிகக்கல்வி
K.முரளி
EXAM - 01
வழிகாட்டல் கருத்தரங்கு
நடைபெறும் இடங்கள்
நாவலர் - Wed - 8-11
விக்னா - Wed - 11-2
வணிகக்கல்லூரி Thu- 2-5
C.C.A Sat - 1[illegible]

Science & Technology
O/L 2007, 10, 9
* பிரத்தியேக வகுப்பு
* குழு வகுப்பு
ஆரம்பம்: 03.01.2007 புதன் 9 am
அதி விசேட சித்திக்கு உத்தரவாதம்
மாணவர்கள் வசதிக்கு ஏற்ப நேர சூசி
17, பின்சர்ஸ் லேன், கண்டிக்குளி.
(கண்டிக்குளி மகளிர் கல்லூரி சர்வோதயம் அருகில்)
தொடர்புகளுக்கு: தொ.பே. 077 6660632.

BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தைக்கருகில்)
A\L 2009
கலை, வர்த்தக, விஞ்ஞானம்
தகுதி அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையுடன்...
பிரிவு I ஆரம்பம் :- 03.01.2007 புதன் பி.ப.3.00
பிரிவு II ஆரம்பம் :- 06.01.2007 சனி பி.ப.2.00

IDM Computer Studies (Pvt) Ltd.
Affiliated University College
216, Navalar Road, Jaffna
O/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனிக்கருத்தரங்கு எமது நிறுவனத்தில்.
03-01-2007 காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.
பாடசாலை மட்டத்தில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள
ICT GIT
பயிற்சி நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
06- 01- 2007 காலை 10.00 மணி
NCC-UK HND-UK பயிற்சி நெறிகளுக்கான கலந்துரையாடல்
03-01-2007 காலை 11.00 மணிக்கு இடம்பெறும்.

திருநெல்வேலியில்
A/L 2007 Day
கணக்கீடு P.பகீரதன்
கம்பனி க/கு - Tue.Wed 4 - 5
தொங்கல் க/கு - Tue,Wed 3-4
ஆரம்பம் 02.01.2007 (இன்று) - Tue - 3pm
நாவலர்
பலாலி வீதி, திருநெல்வேலி

2009
ஆரம்பம் 06.01.2007 சனி காலை 9 am
A/L கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்
யூனிவேர்சல்
பா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

கலை, வர்த்தகத்தின் சிகரம்
விக்னா கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2009
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் 06.01.2007 (8 மணி)


| | |
|---|---|
| Eco. B. சுஜீதரன் | Acc. P. பகீரதன் |
| Com. யசோ | Log. சயந்தன் |
| Tam. N. குழந்தை | Hic.S. பத்மராஜா |
| Geo. N. பாபு | Hin. N.T. தரன் |
| Hist. பத்மன் | Plsci. ஸ்ரீரங்கநாத் |
| Chri. வசந்தன் | Drama. ரமேஸ் |
| Eng. S. விஸ்வநாதன் | |

மு.கு. சென்ற ஆண்டு O/L இல் கல்வி கற்ற எமது நிறுவன மாணவர்கட்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* அனுபவமும் திறமையும் நிறைந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
* சென்ற ஆண்டின் பரீட்சைப் பெறுபேறுகளே இதற்குச் சான்றாகும்.

## மரண அறிவித்தல்

### நடராசா சிதம்பரநாதன்



யாழ்ப்பாணம், வெள்ளாந்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட நடராசா சிதம்பரநாதன் நேற்று 01.01.2007 காலமானார். அன்னார் காலஞ்சென்ற நடராசா - கமலாச்சி தம்பதியரின் புதல்வனும் அன்னலட்சுமியின் (அழகம்மா) கணவரும் பத்மநாதன், மகேஸ்வரி (பிரான்ஸ்), கருணாவதி, ஜெயந்தினி, இந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2007 பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/3, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.